ஆத்தூரிலேயே வீட்டுவசதி வாரிய அலுவலகம் இருந்தால்தான் விவரங்கள் ஏழை மக்களுக்குத் தெரியும். வீட்டுவசதி வாரியத்தால் விண்ணப்பம் வெளியிடப்பட்டு, அதிக வருமானம் உள்ளவர்கள் 10,000 ரூபாயும், நடுத்தர வருமானம் உள்ளவர்கள் 5,000 ரூபாயும், குறைந்த வருமானம் உள்ளவர்கள் 3,000 ரூபாயும் கட்ட வேண்டுமென்று கூறியுள்ளார்கள். அந்த விண்ணப்பங்களை எங்கே வாங்குவது என்று தெரியவில்லை. சேலத்திலேயே வாங்குவதா என்று தெரியவில்லை. ஆத்தூரிலேயே அலுவலகம் ஏற்படுத்தி ஏழை எளிய மக்களிடமிருந்தும் விண்ணப்பங்களைப் பெற்று, அவர்களுக்கும் வீடுகள் கட்டித்தர வேண்டும். மேலும் எப்போது வீடுகள் கட்டப்பட்டு ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூரில் ஏறக்குறைய 27.10 ஏக்கர் நிலமும், நரசிங்கபுரம் கிராமத்தில் 55·38 ஏக்கர் நிலமும் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் நரசிங்கபுரம் கிராமத்தில் 148.44 ஏக்கர் நில ஆர்ஜிதம் செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. இதில் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ. 18 இலட்சம் மதிப்பீட்டில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் முதல் உயர் வருமானம் பிரிவினர்வரை பயன்பெறும் பொருட்டு சுமார் 15 ஏக்கர் நிலப் பரப்பில் 237 மனைகள் அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டு தற்பொழுது முடியும் தருவாயிலுள்ளது. குறைந்த வருவாயினருக்காக ரூ. 56.18 இலட்சம் மதிப்பீட்டில் 162 குடியிருப்புகளும், நடுத்தர வருவாயினருக்காக 36 குடியிருப்புகளும் கட்டப்பட்டிருக்கின்றன. மேலும், ஆத்தூர் புறநகர் பகுதியில் 12.24 இலட்சம் மதிப்பீட்டில் நலிந்த பிரிவினருக்காக 300 மனைகளும் குறைந்த வருவாயினருக்காக ரூ. 13.52 இலட்சம் மதிப்பீட்டில் 228 மனைகளும், ரூ. 18.33 இலட்சம் மதிப்பீட்டில் நடுத்தர வருவாயினருக்காக 149 குடியிருப்புகளும், உயர் வருவாயினருக்காக 35 மனைகளும்நில ஆர்ஜிதம் செய்து, அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மனுக்கள் பெறுவதுபற்றிச் சொன்னார்கள். அலுவலகம் இப்போது எங்கே வைத்திருக்கிறார்கள் என்பது கோப்பில் இல்லை. வீட்டு வசதி வாரியத்தோடு கலந்தாலோசித்து, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆரணியில் ஜரிகை தொழிற்சாலை.

19—*(வினா எண்13974)—திரு.மு. சின்னக்குழந்தை: மாண்புமிகுவீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிபபாரா—

ஆரணியில் ஜரிகை தொழிற்சாலை அமைக்கும் பணி கால தாமதம் ஆகக் காரணம் என்ன?

1987 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சீபுரத்தில் உள்ள தமிழ்நாடு ஜரிகை ஆலையை மேலும் விஸ்தரிப்பு செய்வதா, அல்லது ஆரணி மற்றும் கும்பகோணத்தில் புதியதாக ஜரிகை ஆலைகள் அமைப்பதா, அல்லது தற்போது உள்ள ஜரிகை ஆலையின் கிளையாக அமைப்பதா, என்பது பற்றிய கருத்துரு கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. சின்னக்குழந்தை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே கைத்தறித் துறைக்குப் பொறுப்பேற்றிருந்த மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆரணியில் ஜரிகைத் தொழிற்சாலை அமைக்கப் போவதாக அறிவித்து, அதற்குண்டான இடங்களைப் பார்த்து, அது அப்படியே இருக்கிறது. இப்போது அந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த நடப்பு ஆண்டிலேயே ஆரணியிலே ஜரிகைத் தொழிற்சாலையை ஆரம்பிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆரணி, கும்பகோணம் ஆகிய இடங்களில் இடம் பார்க்கப்பட்டுள்ளது. இதற்கு அத்தியாவசியமான மூலப் பொருள் தங்கமாகும். பம்பாயில் உள்ள தங்கக் கட்டுப்பாட்டு அலுவலரின் அனுமதி பெற்று நாம் அதைக் கொள்முதல் செய்யவேண்டும். பம்பாயில் உள்ள தங்கக் கட்டுப்பாட்டு அலுவரிடம் அனுமதி கேட்டிருக்கிறோம். அங்கேயிருந்து அனுமதி கிடைத்தவுடன் புதியதாக தொழிற்சாலை ஆரம்பிப்பதா அல்லது காஞ்சீபுரத்திலுள்ள ஜரிகை ஆலையின் கிளையாக ஆரம்பிப்பதா என்று அரசு முடிவெடுக்கும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

குடிசை மாற்று வாரிய வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு வீட்டை உரிமையாக்கும் திட்டம்.

20—*(வினா எண் 13011)—திரு.எஸ்.வேணுகோபால்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடிசை மாற்று வாரிய வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு வீட்டை உரிமையாக்கும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குடிசைமாற்று வாரிய வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு வீட்டை உரிமையாக்கும் திட்டம் உள்ளதா என்பதற்கு